# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA10808/F/2023**

திரு. சு.சாரங்கபாணி ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
வட்டார இயக்க மேலாளர் (மகளிர் திட்டம்)
வட்டார வளர்ச்சி அலுவலகம்
ஒலக்கூர் (இ) சாரம்
விழுப்புரம் மாவட்டம் - 604 307 ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **17.03.2023** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **20.04.2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **15.06.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.சு.சாரங்கபாணி அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ப.நீலவேணி, பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) வட்டார வளர்ச்சி அலுவலகம், ஒலக்கூர் (இ), விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 17.03.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம் ஓலக்கூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களின் Village Poverty Reduction Committee (VPRC) மற்றும் Panchayat Level Federation (PLF) ஆகியவற்றின் செயல்பாடுகள், செய்த பணி குறித்த விவரங்கள், செயல்படாத கிராமங்களின் விவரங்கள், கணக்காளரின் மாத சம்பளம், இயங்கி வரும் சுய உதவி குழுக்களின் பெயர்கள், குண்ணப்பாக்கம் ஊராட்சியில் உள்ள 2014 கணக்கு ஆண்டு முதுல் நடப்பு ஆண்டு வரையுள்ள தகவல்கள் மற்றும் 2014 ஆம் ஆண்டு முதல் VPRC மற்றும் PLF மூலமாக கிராம சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் மற்றும் கலந்து கொண்ட நபர்களின் பெயர், கையொப்பம் நகல் என்பது போன்ற தகவல்களை 17 இனங்களில் தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 20.04.2023 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 15.06.2023 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 13.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் மீது சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொண்டு ரூ.25,000/- அபராதம் அளிக்க ஆணையிடவும், தனக்கு ஏற்பட்ட இழப்பினை அளிக்க சட்டப்பிரிவு 19(8)(b)ன் படி ஆணையிடவும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் 13.02.2025 நாளிட்டு வழங்கிய தகவல்களும் முழுமையான தகவல்களாக இல்லை என ஆணையத்தில் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த திருமதி.க.மகேஸ்வரி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.***

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஓம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA10808/F/2023</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
வட்டார இயக்க மேலாளர் (மகளிர் திட்டம்)
வட்டார வளர்ச்சி அலுவலகம்
ஒலக்கூர் (இ) சாரம்
விழுப்புரம் மாவட்டம் - 604 307.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு. சு.சாரங்கபாணி, த/பெ. சுப்ரமணி,
எண்.23, மாரியம்மன் கோயில் தெரு
குண்ணப்பாக்கம் அஞ்சல் மற்றும் கிராமம், திண்டிவனம் தாலுக்கா
விழுப்புரம் மாவட்டம் - 604 101

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025